# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

ஜூன் 2024 (மடல் - 24) செய்தி - 6

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை (சங்கீதம் 16:8).

## பொருளடக்கம்




ஆயர் மடல் 2

ஆயரம்மா மடல் 4

பெண்கள் பகுதி 6

Children's Corner 9

வேத வினாக்கள் 20

கோதுமை மணி 23

துணுக்குகள் 25

ஆலய பக்கம் 27

# ஆயர் மடல்

***“பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப்போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்.” மத்தேயு 10:5,6***

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நமக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கு நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் அருள்செய்வாராக.

இயேசு கிறிஸ்து அனைத்துச் சீடர்களையும் அழைக்கிறார். பலதரப்பட்டச் சூழலில் இருந்து வந்தவர்கள் என்றாலும் நற்செய்திப் பணி அனைவருக்குமானது இதுவரை இயேசு, தனித்து ஊழியம் செய்து கொண்டிருக்கிறார், சீடர்கள் இயேசுவை உற்று கவனிப்பவர்களாகவும், கற்றுக்கொள்கிறவர்களாகவுமே இருக்கிறார்கள். இப்பொழுது தாங்கள் கற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்தும் நேரம் வந்திருக்கிறது. இயேசு திருப்பணிக்காகத்தமது சீடர்களை அனுப்புகிறார். அதோடு, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகலநோய்களையும் குணமாக்கவும் தமது சீடர்களுக்கு அதிகாரத்தையும் கொடுத்து அனுப்புகிறார். தமக்குரிய அதிகாரத்தைத் தம் சீடர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். தங்கள் காலத்துக்குப் பின்னால், தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ஒருவரைப் பயிற்றுவிக்கத் தயங்கும் இன்றய உலகத்தில், இயேசு கிறிஸ்து, மிகக் குறுகிய தமது பூலோக வாழ்நாளுக்குள் தம்முடைய சீடர்கனை நன்கு பயிற்றுவித்துவிடவேண்டும் என்று நினைத்து சுவிசேஷப் பணிக்கு அனுப்புகிறார். ***குருவைக்காட்டிலும் சீடன் சிறப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிற குருவை, இயேசுவில் மட்டுமே காணமுடியும்.***

***இயேசு கட்டளையிட்டு*** (Jesus was commanding or giving them order) என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வினைச்சொல் ***பரகேல்லேன்*** (Paragellein) இதற்குக், ***கட்டளை*** என்று பொருள். இது ***ஒரு இராணுவச் சொற்றொடராக இருக்கிறது.*** கட்டளையிட்ட நபருக்குக் கட்டாயம் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இயேசு தம்முடைய சீடர்களை, யூதர்களிடம் அதாவது இஸ்ரவேல் மக்களிடம் மட்டும் அனுப்புகிறா். இஸ்ரவேல் மக்களுக்கு மட்டும் நற்செய்தியை அறிவிக்கச் செல்லுங்கள் என்பது மத்தேயு நற்செய்தியில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும், தமது பன்னிரெண்டு சீடர்களுக்கு மட்டுமே சொல்லுகிறார். எழுபதுபேர் அடங்கிய சீடர்களுக்கு இயேசு சொல்லும்பொழுது, கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் செல்லுங்கள் என்கிறார். (லூக்கா 10:1) எனவே இது அப்போஸ்தலர்களுக்கு மட்டும் சொல்லப்பட்ட ஆரம்பக்காலக் கட்டளை. இயேசு இப்படிச் சொல்வதற்கு சில காரணங்கள் இருக்கலாம்.

1. இப்பொழுதுதான் முதன் முதலாக சீடர்கள் மட்டும் தனித்து நற்செய்திப் பணிக்குச் செல்கிறார்கள். முதன் முதலில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்யச் செல்லும் சீடர்களை, யூதர்கள் மத்தியில் செய்தால் போதும் என்று இயேசு நினைத்திருக்கலாம்.
2. பொதுவாகவே யூதர்கள் பிற இன மக்களோடு அதிகம் தொடர்பு வைப்பதில்லை. சமாரியர்களோடும் சரியான உறவு இல்லை. எனவே யூதர்களிடம் மட்டும் செல்லுங்கள் என்று சொல்லி இருக்கலாம்.
3. யூதர்கள் மத்தியில் ஆத்தும அறுவடைக்கு ஆயத்தமாக இருந்திருக்கலாம் எனவே இயேசு முதன் முதலில் யூதர்களிடம் அனுப்பி இருக்கலாம்.
4. இயேசுவின் இப்பூலோக வாழ்வின் ஊழியக் காலம் மிகக்குறைவு. அதற்குள் சீடர்களைப் பயிற்றுவித்து ஊழியத்துக்கு அனுப்பும் பொழுது இஸ்ரவேல் மக்கள் வசிக்கின்ற நாடுகளில் கூட அவர்களால் முழுமையாக நற்செய்தியைச் சொல்ல இயலாது என்பதினாலேயே யூதர்களுத்குள் மட்டும் அனுப்பி இருக்கலாம்.
5. பிற இன மக்களுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்லும் பொறுப்பினைப் பவுல் அப்போஸ்தலனுக்குக் கொடுக்க வேண்டும் என்பது கடவுளின் திட்டம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இரட்சிப்பு யூதர் வழியாக அதாவது இரட்சிப்பு யூதர்கள் வழியாகத்தான் பிற இன மக்களுக்கு வருகிறது. (யோவான் 4:22)

இயேசு கிறிஸ்து யூதர்களிடம் மட்டுமே செல்லுங்கள் என்கிற கட்டளை எக்காலத்துக்கும் பொருந்தக்கூடியதல்ல. காலகாலமாகப் பின்பற்றக்கூடிய கட்டளையுமல்ல. ஏனெனில், இயேசுவே ரோம நூற்றுக்கு அதிபதியின் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானார். தெக்கப்போலி என்கின்ற பிற இன மக்கள் வசிக்கின்ற நாட்டில்தான் லேகியோன் பிசாசைத் துரத்தினார். எல்லாவற்றிற்கும் மேலாக ***நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பதுதான் இயேசுவின் இறுதிக் கட்டளையாக இருக்கிறது.*** (மாற்கு 16:15, கொலோசெயர் 1:23) எல்லா மக்களும் இரட்சிப்பு அடையவேண்டும் என்பதே ஆண்டவரின் விருப்பம். ஆண்டவரின் உண்மை சீடர்களாக இருந்து நற்செய்திப்பணி செய்வோம். ஆணடவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

***Res. : 02 6791915***
***Mobile : 054 7401421***
***mail : asamuelrev@gmail.com***

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
**Rev. Dr. A. Samuel**

# ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாகவும் ஆச்சரியமாகவும் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை (சங்கீதம் 16:8).**

தாவீதின் சங்கீதங்களில் வரிசையில் 16ஆம் சங்கீதமும் இடம்பெற்றுள்ளது. தாவீது எழுதிய மிக்தாம் என்று கூறப்பட்டுள்ளது. மிக்தாம் என்ற வார்த்தைக்கு பொன்மொழிகள் என்றும் கூறலாம். பொன்னான சங்கீதம் என்றும் செல்லலாம். (Golden Psalm) சவுலும் அவனை சார்ந்தவர்களும் தாவீதைத் துரத்துகிறார்கள். சவுலும் அவன் படையினரும் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது தாவீதும் அபிசாய்யும் சவுலின் முகாமுக்குள் சென்று சவுல் அரசனின் தலைமாட்டில் குத்தி வைக்கப்பட்டிருந்த அவனுடைய ஈட்டியையும் செம்பையும் எடுத்து வந்து விடுகிறார்கள். (1சாமு 26:5-12) இங்கு தாவீதின் பெரிய கவலை, சவுல் தன்னை துரத்துவது என்பதுமட்டுமல்ல, அதைவிட தனக்கு இழைக்கப்படும் கொடுமை என்பது தான் ஆண்டவரை சேவிப்பதற்கும், தொழுது கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்பதைத்தான் மிகப்பெரிய குறையாகச் சொல்லுகிறார். (1சாமுவேல் 26:19) என்னை அன்னிய தேசத்துக்குள் துரத்துவதன் வழியாக ஆண்டவரை நான் சேவிக்க முடியாமல் அந்நிய தேவர்களை சேவிக்க வேண்டிய சூழலுக்கு என்னைத் தள்ளுகிறார்கள். இதுதான் எனக்கு மிகப்பெரிய கவலையாக இருக்கிறது என்கிறார். இந்த சம்பவத்தை பின்னணியாக கொண்டு இந்த சங்கீதம் பாடப்பட்டிருக்கிறது.

**1. தனக்கு கடவுளுக்கும் இருக்கிற நெருக்கமான உறவை விளக்குகிறார்: (1-4)**

தேவனே, என்னை காப்பாற்றும் உம்மை நம்பி இருக்கிறேன் என்று தன்னை ஆண்டவர் பாதுகாக்க வேண்டும் என்று அழைக்கிறார். என்ன ஆபத்து என்று சொல்லப்படவில்லை ஒருவேளை சவுல் துரத்துவதாகக்கூட இருக்கலாம். நான் உம் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளேன் என்கிறார். புதிய மொழிபெயர்ப்பில் உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன் என்கிறார். கர்த்தரால் மட்டுமே ஆபத்துக்கள் நிறைந்த உலகில் பாதுகாப்பைக் கொடுக்க இயலும். ஆண்டவரே என் புகலிடம் என்கிறார். அதோடு கர்த்தரே என் ஆண்டவர் என்கிறார். ஒருவேளை ஆலயத்தில் வந்து வழிபட முடியாமல் என்னை அன்னிய தேசத்திற்குத் துரத்தலாம், ஆனால் எப்பொழுதும் நீரே என் ஆண்டவர், உன் மீது மட்டுமே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்கிறார்.

**2. கர்த்தரே என் பங்கு என்கிறார்: (5-8)**

கர்த்தரே எனது உரிமை சொத்து என்கிறார். இஸ்ரவேலின் கோத்திரங்கள் எல்லாவற்றிற்கும் யோசுவா கானா நாட்டை பங்கிட்டு கொடுக்கிறர். ஆனால் லேவியருக்கு

கானா நாட்டிலே பங்கு கொடுக்கப்படவில்லை. (யோசுவா 13:14) ஆனால் கர்த்தர் தம்மையே லேவியருக்கு உரிமை சொத்தாகக் கொடுக்கிறார். (உபாகமம் 10:9) இங்கு சங்கீதக்காரன் கர்த்தரே சுதந்திரம் என்கிறார். ஆண்டவர் தாமே என் உரிமை சொத்து. அவர் என் வலது பக்கத்தில் இருக்கிறபடியால் தாம் அசைக்கப்படுவதில்லை என்கிறார். ஆண்டவர் நமது பங்காக இருக்கிறபொழுது நாம் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை.

**3. கர்த்தரே என் மன மகிழ்ச்சி என்கிறார்: (9-11)**


என் இருதயம் அக்களிக்கிறது, என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகிறது. இங்கு சங்கீதக்காரனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆண்டவரை தனது பங்காக அல்லது உரிமை சொத்தாக தன் முன்னாக வைத்திருப்பது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த மகிழ்ச்சி அவர் இருதயம், உள்ளம், உடல் அனைத்திலும் பரவி கிடைக்கிறது. ஏனெனில் கடவுள் மீது நம்பிக்கை வைத்து, அவரைத் தனது உரிமை சொத்தாக்கி, தனது கண்களுக்கு முன்பாக வைத்திருப்பதால் இவ்வுலகத்தின் துன்பத்திலும் துயரத்திலும் இருந்து எனக்கு விடுதலை கிடைக்கிறது. அதோடு நிறைவாழ்வு அல்லது நித்திய வாழ்வு எதிர்காலத்தில் உண்டு என்ற நம்பிக்கையினால் என் உடல் உள்ளம் ஆன்மா பேருவகை கொள்கிறது என்கிறார்(சங்கீதம் 16:10,11).

சங்கீதக்காரனை போன்று கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளுவோம். நீதி எனக்கு வேண்டாம், நீதியின் கடவுளே எனக்கு வேண்டும். நிலம் எனக்கு வேண்டாம் நிலத்தின் உரிமையாளரே எனக்கு வேண்டுமென்று ஆண்டவர் மீது முழு நம்பிக்கைவைப்போம். ஆண்டவரை நமது உரிமை சொத்தாக்கி, நமது கண்களுக்கு முன்பாக வைத்துக் கொள்வோம். அவர் ஆற்றலின் அடையாளமாக நமது வலதுபக்கத்திலிருந்து நம்மையும் நமது குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.
மீட்பரின் பணியில்

*மீட்பரின் பணியில்*
***திருமதி. ஜெபா சாமுவேல்***

**ஜூலை & ஆகஸ்டு மாத தலைப்பு**
**விடுதலை வாழ்வு**
***Liberated life***

## சீஷன்



சீஷன் என்பவன், ஒரு தலைவனை பின்பற்றி, அவருடைய கொள்கைகளை மற்றவர்களிடம் பரப்புகிறவன்.

**கிறிஸ்துவின் சீஷனானவன்** :

- இயேசுவை முதலாவது தன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.
- இயேசுவின் இலவசமான மீட்பைக் குறித்து மற்றவருக்கு சொல்ல வேண்டும்.
- பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு அனுதினமும் இயேசுவோடுள்ள ஐக்கியத்தில் வளரவேண்டும்.

மொத்தத்தில் இயேசுவின் சீஷன் என்று சொல்பவன், தன் காரியங்கள் அனைத்திலும் இயேசுவை பிரதிபலிக்க வேண்டும். வேத வசனத்தின்படி, கிறிஸ்துவின் சீஷனாக அனுதினமும் வளருவதற்கு செய்ய வேண்டிய காரியங்களை சற்று சிந்திப்போம்.

### இயேசுவிற்கு அனைத்து காரியத்திலும் முதலிடம் கொடுக்க வேண்டும் (மாற்கு 8:34-38)

இயேசுவின் சீஷன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, இயேசுவை பின்பற்ற வேண்டும். சுயத்தை சிலுவையில் அறைந்துவிட்டு, ஒவ்வொரு காரியத்திற்கும் இயேசுவை மாதிரியாக கொள்ள வேண்டும். இயேசுவைப் பிரியப்படுத்துவது மட்டுமே வாழ்வின் முக்கியமான குறிக்கோளாக இருக்க வேண்டும்.

### இயேசுவின் உபதேசத்தைக் கைகொள்ள வேண்டும் (யோவான் 8:31-32)

இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் அவருக்கு நாம் சீஷர்களாக இருக்க முடியும். இயேசுவின் உபதேசமாகிய அவருடைய வசனம் நம் உள்ளத்தில் பதிந்திருந்தால், அவருக்கு கீழ்ப்படிந்த வாழ்க்கையை நம்மால் வாழ முடியும். அவரை நேசிக்கிற யாவரும் அவருடைய கட்டளையைக் கைக்கொள்ளுவார்கள் என்று வேதம் கூறுகிறது (யோவான் 14:21). நமக்கு மாதிரியான இயேசுகிறிஸ்து, தன் பெற்றோருக்கும், தன்னை அனுப்பின பிதாவுக்கும் கீழ்ப்படிந்து வாழ்ந்ததின் நிமித்தம், பிதாவின் சித்தத்தை பூரணமாய் நிறைவேற்ற முடிந்தது. எனவே இயேசுவின் சித்தத்தின்படி அவருடைய சீஷனாக வாழ, அவருடைய உபதேசத்தைக் கைக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

### கனிகொடுக்கும் வாழ்க்கை (யோவான் 15:5-8)

விழுந்து போன உலகத்துக்கு மீட்பை அறிவிக்க, நாம் கனிகொடுக்கும் வாழ்வை வாழ வேண்டும் என்பதையே இயேசு விரும்புகிறார். அதை நம்முடைய பிரயாசத்தால் கொடுக்க முடியாது. யோவான் 15-ம் அதிகாரத்தில் உள்ளபடி கொடியாகிய இயேசுவில் நிலைத்திருக்கும்போது, மட்டுமே அநேக கனிகளை நாம் கொடுக்க முடியும். ஆவியின் கனிகள் ஒன்பதும் சீஷனிடத்தில் காணப்பட வேண்டும். ஏனெனில் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய ஆவியின் கனி மிகவும் அவசியம். இயேசுவின் உபதேசத்தைக் கைக்கொள்ளும்போது அவரில் நிலைத்திருந்து, கனிகளைக் கொடுக்க முடியும்.

இயேசுவின் குடும்பத்தில் அன்பானது மிகவும் அவசியமான ஒன்று. 1கொரி. 13-ம் அதிகாரத்தில் உள்ள அன்பு நம்மில் காணப்பட வேண்டும். அந்த அன்பே நம்மில் ஒருமைப்பாடை கொடுக்கும். சீஷனானவன் சகலத்தையும் தாங்குகிறவனாயும், சகிக்கிறவனாயும் இருக்க வேண்டும். பொறுமையுள்ளவனாய், சுவிசேஷ ஊழியத்தை செய்ய சீஷனானவனுக்கு அன்பு தேவை. அன்பில்லாதவன் தேவனை அறியான் என்ற வசனத்தின் படி, தன்னை சுற்றியுள்ள சீஷரிடமும், மற்றவரிடமும் அன்புள்ளவனாய் இருந்தால் மட்டுமே உண்மையுள்ள சீஷனாய் இருக்க முடியும்.

- ***மற்றவரையும் சீஷராக்க வேண்டும் (மத்தேயு 28:18-20)***

இயேசுவானவர் பரத்துக்கேறுமுன் கொடுத்த கட்டளை, "மற்றவர்களை சீஷராக்குங்கள்" என்பதே (மத்தேயு 28:19). மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, மனந்திரும்புதலின் அவசியத்தை எடுத்துக் கூறி, மீட்பை அருளும் இயேசுவை அவர்கள் ஏற்றுக்கொள்ள உதவ வேண்டும். இயேசுவானவர் எவ்வாறு சீஷர்களை தனக்கு உருவாக்கினாரோ, அதுபோல நாமும் சீஷர்களை இயேசுவுக்காக உருவாக்க வேண்டும்.

- ஆக ஒரு கிறிஸ்தவ சீஷனானவன், இயேசுவுக்கு முதலிடம் கொடுத்து, அவருக்கு கீழ்ப்படிந்து, கனி கொடுத்து, பிறரிடம் அன்பு கூர்ந்து, சீஷரை உருவாக்க வேண்டும். அத்தகைய சீஷனின் மூலம் பாவம் நிறைந்த இந்த உலகில் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும்.

தேவன் நம் ஒவ்வொருவரையும் நாம் உருவாகுமுன்னே ஒரு உயர்ந்த நோக்கத்தோடு படைத்திருக்கிறார். சிம்சோன் மற்றும் யோவான் ஸ்நானகன் ஆகிய இருவரும் பிறக்கும் முன்னே அவர்கள் பெற்றோருக்கு தேவன் எப்படி அவர்களை வளர்க்க வேண்டும், அவர்கள் பிறப்பதின் நோக்கம் என்ன என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்.

சிம்சோன் தன் வாழ்க்கையில் தேவன் வைத்திருந்த நோக்கத்தை மறந்து, தன் சுயத்துக்கு முன்னுரிமை கொடுத்து, மோசமான முடிவை சந்தித்தான்.



யோவான் ஸ்நானகனோ, தனக்குரிய அழைப்பில் மிகவும் தீர்க்கமாயிருந்தார். மனந்திரும்புதலுக்கேற்ற வசனத்தை பிரசங்கித்து, இறுதி மூச்சு வரை தன்னை உலகத்தால் கறைபடாமல் காத்துக்கொண்டார். இயேசுகிறிஸ்துவின் முன்னோடியாய் வாழ்ந்தார்.

இன்று, கறைபடிந்த உலகில் வாழும் நாம், யோவான் ஸ்நானகனைப் போல, தேவன் நம் வாழ்க்கையில் வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்ற நம்மை ஒப்புக்கொடுக்கிறோமா அல்லது சிம்சோனைப் போல நம் சுயத்துக்கு இடம் கொடுத்திருக்கிறோமா என்று சற்று சிந்திப்போம்! இயேசுவின் உண்மையான சீஷனாக வாழ தூய ஆவியானவர் நமக்கு அருள் செய்வாராக!

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

**நற்செய்தியை முதன் முதலில் பரப்பிய பெண் – மகதலேனா மரியாள்**

*[யோவான் 20:1-20]*

*இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் பெண்களுக்கு ஒரு சிறப்பிடம் இருந்தது. சருவத்தையும் வெறுமையிலிருந்து உருவாக்கிய ஆண்டவர், பெண்ணை மட்டும் உயிருள்ள மனிதனின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கினார். நம் உணர்வுகளை நன்றாக அறிந்தவர்.*

*இயேசு கிறிஸ்துவின் கல்லறையினிடத்தில் முதலாவதாக ஓடி வந்தவள் இந்த மகதலேனா மரியாள். மகதலேனா என்பது கலிலேயா கடற்கரையின் மேற்கு கரையோரமுள்ள ஒரு பட்டணமாயிருந்தது. இயேசுவின் துவக்கக் கால, கலிலேயா ஊழியத்தின்போது சந்திக்கப்பட்டவள் இவள். அந்த நாளிலிருந்து அவள் இயேசுவின் சீஷி ஆனாள்(லூக்கா 8:2). இயேசுவின் சீஷர்களைப் போல் நிரந்தரமாய் ஊழியப்பாதையில் கூட நின்றாள். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோதும், அடக்கம் பண்ணப்பட்டபோதும் கூட நின்றாள். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசுவைத் தவறான இடத்தில் தேடினாள். பல வேளைகளில் நாமும் கூட சோர்ந்துபோய் அழுகிறோம். தவறான இடங்களில் தேடுகிறோம்.*

*இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிட இயேசுவின் கல்லறையினிடத்தில் வந்தாள். உயிர்த்தெழுந்த இயேசுவாக அவள் அருகில் நின்றும் அவரை மரியாள் அறிந்து கொள்ளவில்லை. அழுது கொண்டிருந்த அவளைப் பார்த்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். அவளது அழுகைக்கான காரணம் இயேசுவுக்கு நன்கு தெரியும். ஆனால் அவளது பாரத்தை பகிர்ந்துகொள்ள கேட்டார். மரியாளே என்று அழைத்தார். அவளும் போதகரே என்று அழைத்தாள். உயிர்த்தெழுந்த நற்செய்தியை அறிந்து கொண்ட மரியாள் ஓடி உலகித்திற்கு அறிவித்தாள். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை முதன்முதலில் பரப்பிய பெண் இந்த மரியாள்!*

*இயேசு மரியாளுக்கு மிக அருகில் நின்றார். அவளது சந்தேகங்கள், சூழ்நிலைகள், பயங்கள் இவற்றை விட நெருக்கமாக நின்று கொண்டிருந்தார். ஆனால் அவளோ உயிரோடிருந்த இயேசுவை அறியாமல் அழுது கொண்டிருந்தாள்.*

*நாமும் கூட நம்மோடு ஜீவிக்கும் இயேசுகிறிஸ்து நம் அருகில் இருந்தும், நம் துக்கங்களை, பாரங்களை சுமந்து கொண்டிருக்கிறோம். அழுதுக் கொண்டேயிருக்கிறோம். சூழ்நிலைகளைப் பார்க்காமல் அவரைப் பார்ப்போம்.*

*இயேசுகிறிஸ்துவின் பார்வையில் நாம் அருமையானவர்கள். இயேசு உயிரோடிருக்கும் நற்செய்தியை இருளில் வாழும் ஜன ங்களுக்கு எடுத்துரைப்போம். மகதலேனா மரியாள் எப்படி ஓடோடிச் சென்று அறிவ்த்தாளோ, அதேபோல் நாமும் நம்மை சந்தித்த இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவோம். சீஷர்களாக மாறுவோம்!*

**ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,



The theme this June is "**DISCIPESHIP**".

To be a disciple means to be a follower. For Christians, this means being a follower of Jesus Christ.


In Matthew 28:29, Jesus says, " "Therefore, go and make disciples of all the nations, baptizing them in the name of the Father, and the Son, and the Holy Spirit."

Children, you can experience great P-O-W-E-R in your walk with God when you begin to apply the below principles.

## P-O-W-E-R to follow JESUS

**P** - Praying from the heart,
**O** - Obeying the Holy Spirit,
**W** - Worshiping with the Church,
**E** - Explaining their faith to others, and
**R** - Reading the Bible daily

## THE DISCIPLESHIP PROCESS





**Let's ponder where we are, in the Dicipleship process…!**

# MAJOR BIBLE EVENTS #6 – COMING INTO CANAAN




God had promised the Israelites that He would lead them to a land flowing with milk and honey.




Before Moses died, he chose Joshua to be the next leader of the Israelites.

There were many groups of people living in the Promised Land before the Israelites got there. God encouraged Joshua to be strong and courageous because He would be with him.

The first city they encountered was Jericho, which was surrounded by a great wall. Six days they walked around the city once. On the seventh day, they walked seven times, and when the trumpets were blown, all the people of Israel gave a loud cry. The walls collapsed.



When it was time to cross the river into the Promised Land, Joshua had the priests go first and as soon as their feet touched the river, the water parted so everyone could get across safely - just like what happened with Moses at the Red Sea!

That day, the Lord made Joshua a great leader in the eyes of all the Israelites. Finally, after all those years, the Israelites were in the Promised Land.



They could build houses and cities. They could plant fields, vineyards, and orchards. It was a land flowing with milk and honey.

Joshua trusted God for everything. The giants and the mighty walled nations, were no match for our great God!

**He can do mighty things for us, when we place our trust in Him!**

# CHILDREN IN THE BIBLE #6 – JOSIAH



Josiah became king of Judah when he was only eight years old, and he followed God's rules exactly right.



When Josiah grew up, he saw that God's Temple church was starting to fall apart. He ordered the priests to pay workers to fix the Temple church.

While they were cleaning and fixing the Temple church, Hilkiah the Priest found the Bible. Hilkiah gave it to King Josiah, and when King Josiah read it, he was afraid, and sad.





He knew that the people had not been following God's rules. Josiah was afraid that God was going to punish the people for not believing in Him and following His rules.

Then, Josiah made it a rule in Judah that people could only believe in and worship the real God. He wouldn't let anyone worship the fake gods anymore, and he made everyone follow God's rules in the Bible.




The Bible tells us that King Josiah was one of the greatest kings there ever was because of how much he loved God and did the right things that God wanted him to do.

**Daily Application** – Children, we too can do great things for God, when with **courage, we trust Him, and have faith in Him.**

## SAYING IT WITH PICTURES…




Here I am! I stand at the door and knock. If anyone hears my voice and opens the door, I will come in and eat with that person, and they with me. — REVELATION 3:20 NIV




Neither is there salvation in any other: for there is none other name under heaven given among men, whereby we must be saved. – ACTS 4:12 KJV

## TINY TOTS SECTION

### COLOR IN…Telling Others about Jesus



# Following Jesus is like running a Race

## Out of Place

**INSTRUCTIONS:** Find and circle the silly things that don't belong in the picture. Can you find 5 or more?




## Love one another like Jesus!

## I Spy Love

**INSTRUCTIONS:** Find and circle anything you consider to be a symbol of love.



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – DISCIPLESHIP

1. What does the word DISCIPLE mean?

a. Teacher  b. Fisherman
c. Learner  d. Friend

2. What did Jesus say when he called his disciples?

a. Come, Follow me!  b. Come and Feed me.
c. Let's make a deal.  d. Watch and Pray

3. Which two fishermen called to be disciples, were brothers?

a. Paul Silas  b. Andrew Peter
c. John Andrew  d. Matthew Andrew

4. Which OTHER two brothers were called by Jesus to be his disciples?

a. Peter John  b. John Mark
c. James John  d. Paul Silas

5. Which symbol did the early Christians use to represent Follower of Jesus?

a. Rainbow  b. Dove
c. Fish  d. Cross

6. Peter, the disciple...

a. Doubted Jesus  b. Denied Jesus
c. Betrayed Jesus  d. Referred to Jesus as Messiah

7. Andrew, the disciple... (John 1:41)

a. Doubted Jesus  b. Denied Jesus
c. Betrayed Jesus  d. Referred to Jesus as Messiah

8. Thomas, the disciple...

a. Doubted Jesus  b. Denied Jesus
c. Betrayed Jesus  d. Referred to Jesus as Messiah

9. Judas, the disciple...

a. Doubted Jesus  b. Denied Jesus
c. Betrayed Jesus  d. Referred to Jesus as Messiah

10. Who were the disciples to teach and baptize? Matt. 28:19

a. Only the Jews  b. Only the Gentiles
c. Jews and Gentiles  d. All Nations

11. The message in Matthew 28:19-20 is popularly known as what?


a. The Great commission  b. The farewell command.
c. The 11th command  d. Last words of Jesus

12. The 12 disciples of Jesus were drawn from among all the below groups, except,

a. Fishermen  b. Tax collectors  c. Pharisees  d. Galileans

**The Great Commission Maze**

'Go and make disciples of all nations, baptising them in the name of the Father and of the Son and of the Holy Spirit, teaching them to observe all things that I commanded you.'




How can you tell people about Jesus and make disciples today?

Can you take the Bible to all nations of the world in the maze?

**The Great Commission**
**Matthew 28:16-20**

1. How many disciples were in this passage?





2. Where did the disciples go?




3. Who sent them to the mountain?



4. He tells them to go and make ________?




5. What are they to teach the new disciples?



## Find It!

Maria and Daniel from the Philippines like helping their *lola* (grandmother). Today they took turns pushing her wheelchair through the park while she told them about the missionary who baptized her. See if you can find nine things below that Maria and Daniel might use on a mission someday.






## SADHU SUNDAR SINGH – INDIAN DISCIPLE OF CHRIST

Sadhu Sundar Singh (1889 -?) studied in a Christian school when he was young. When Sundar was a teen, his mother died. This made him bitter and he wanted to kill himself. A vision of Jesus at the age of 16, changed his life



Later, he wrote: "**I do not believe in Jesus Christ because I have read about Him in the Bible – I believe in him because I saw Him, and experienced Him, and know Him in my daily experience**."

Sundar wore the saffron robe (the robe of the Sadhus – the Holy men in India), and traveled mainly barefooted throughout India, preaching Christ wherever he went.




He also climbed the Himalayas and went into Tibet many times where he was persecuted and tortured, but was each time delivered miraculously.

In the summer of 1929, he made his final trip to Tibet and was never seen again.

True Discipleship is not just learning about Jesus and his teachings, it is living the life of Jesus according to the will of the Heavenly Father.


## TEEN THOUGHT - The Walk of the Christian

A father and son arrived in a small western town looking for an uncle whom they had never seen. Suddenly, the father, pointing across the square to a man who was walking away from them, exclaimed, "There goes my uncle!"

His son asked, "How do you know when you have not seen him before?"

"Son, I know him because he walks exactly like my father."

If we follow Jesus and walk in the Spirit, the world will know us by our walk.



## SPOT 7 DIFFERENCES BETWEEN BOTH PICTURES

**Looking upon Jesus, as we follow His Word and His Will...**



## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below...

1. The theme for the month of June is: ________________________________.
2. Experiencing POWER in your walk with God refers to

   (i) ______________________________ (ii) ______________________________

   (iii)______________________________ (iv) ______________________________

   (v) ______________________________.
3. Joshua's story teaches us that ________________________________________

   ____________________________________________________________________
4. From the life of Josiah, we learn that we can do great things for God when

   ____________________________________________________________________.
5. Matthew 28:19 says - __________________________________________________

   ____________________________________________________________________

   ____________________________________________________________________.
6. ______________________________________________ is called the Indian

   Disciple of Christ.

Children, may we grow in discipleship with Jesus - Sharing His Word, His Love and His Blessings with others. The Holy Spirit will empower us to do God's will.

**God bless,**

**Mrs. Briliya Jeyaseelan.**

## Answers to May Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – HOW WELL DO YOU KNOW THE HOLY SPIRIT?

1. a. True
2. a. True
3. b. False
4. a. True
5. a. True
6. a. True
7. a. True
8. c. Genesis
9. c. Speaking with wisdom
10. b. Dove
11. b. Pentecost
12. d. Savior

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

**வேதாகமம் முழுவதும்**

***(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)***

1. பூமியின் நடுவில் ஆசீர்வாதமான மூன்று தேசம் எவைகள்?
2. இஸ்ரவேலின் ராஜா சவுல், பவுல் என்ற சவுல் ஆகிய இருவரைத் தவிர மூன்றாவது சவுல் யார்?
3. நித்திய விருந்து எது?
4. மெய்யான பழமொழி என்ன?
5. ஒலிவ மலையில் தங்கி வந்தவர் யார்?
6. அரபி தேசத்திலுள்ள சீனாய் மலை என்ன?
7. கப்தோர் என்பது என்ன?
8. வானபரியந்தம் எட்டின விருட்சம் யார்?
9. கர்த்தரை நாம் எதினால் சோதிக்கலாம்?
10. கழுகைப் போல பறந்து வருகிறவர்கள் யார்?
11. பூமியின் கேடகங்கள் யாருடையவைகள்?
12. ராஜாவின் பாதங்களில் விழுந்து அழுத ஸ்திரி யார்?
13. இயேசுவின் பாதத்தில் விழுந்து அழுத ஸ்திரி யார்?
14. ஆசீர்வாதம் கேட்ட ராஜா யார்?
15. தன் சபையை ஆசீர்வதித்த ராஜா யார்?

குறிப்பு : ***அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.***

## ஜூன் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

1. மனமகிழ்ச்சியின் நாள் (ஏசாயா **58:13)**
2. ஆயத்த நாள் (மாற்கு **15. 2)**
3. ஆத்துமாவைத் தாழ்மை படுத்த வேண்டும். ( லேவி. **16:31)**
4. ஒரு வேலையும் செய்யாதபடிக்கு ஆத்துமாக்களுக்காகப் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி (எரேமியா **17: 201,22)**
5. தேவ வசனத்தைக் கேட்கும்படி (அப்போஸ்தலர் **13: 44)**
6. இயேசு (லூக்கா **13:10, 2)**
7. பவுல் (அப்போஸ்தலர் **18 : 4, 1)**
8. பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளும், பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவுமே (எசேக்கியேல் **46: 4)**
9. தங்களைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அறியும் படிக்கு (எசேக்கியேல் **20:12)**
10. அண்ணகர்கள் (ஏசாயா **56 : 4)**
11. பகைஞர் எருசலேமைப் பார்த்து (புலம்பல் **1:7)**
12. இஸ்ரவேல் வம்சத்தார் (எசேக்கியேல் **20 :13)**
13. ஒலிவ மலை (அப்போஸ்தலர் **1:12)**
14. இயேசுவின் வருகையில் உலகத்தின் முடிவில் ஓடிப்போவது (மத்தேயு **24:20)**
15. நான்கு ஜீவன்கள், இருந்தவரும் இருக்கிறவரும். பரிகத்தர் பரிசுத்தர் பரிசுத்தர். (வெளி. **4:8)**

## மே மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Kishi Maher
9. Mrs. Jenila Gannraj.L
10. Mrs.Jasmine Sobha
11. Mr. Jeba Jino
12. Mr.Salin Robert
13. Mrs.Sheeba Merlin
14. Mrs.Sheeba Herlin
15. Mrs. Subija Jino
16. Mrs . Sharmila Rajesh
17. Mrs .Priya Ranjith Kumar
18. Mr. Prawin Durai Sam
19. Mrs.Helen Sharmila Ray
20. Mrs.praveena Arun
21. Mrs.Nandhini Rajkumar
22. Mrs.Desigta Jaison
23. Mrs.Subi Kishore

## Children who answered May – 2024 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Camryn Robert.S
4. Clement Dave
5. Evelyn Gracia
6. Galvin Robert.S
7. Gabrilyn Hannah
8. Giana Elin
9. Jevlyn Ana
10. Jerilyn Pushpam Nelson
11. Johan Sam Manuel
12. Joha Anit Manuel
13. Jeya Jehosheba Maher
14. Jeya Joshua Maher
15. Jen Scudd
16. Jim Scott
17. Johanan Paul Jino
18. Joanna Paul Jino
19. Liana Erin
20. Steffi Priscilla .R
21. Starlyne Noble
22. Jebasheba .M
23. Joshuva koshy
24. Leona Juliet
25. Hadriel Adventier
26. Yedidiah Arun (Ruwais)
27. Jaylan paul Jino
28. Evelyn Loria V
29. Daniel Vanya (RUWAIS)
30. Yovaan jairus (Ruwais)
31. Jaslin shanna
32. Jarick Aaron
33. Danion Lemuel
34. Rivqah Deby Rajkumar
35. Debi Lovisha
36. Nijolin Jose
37. Aaran
38. Joel Abrakam
39. Janey Titus
40. P.S.Kev Shannen

# கோதுமை மணி



## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்

***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***
***14-06-1912 – 20-01-1997***

**கண்ணில் ஏற்பட்ட பலவீனம்**

ஈடித்தின் கண்ணில் ரெட்டினா குளறுபட்டது. எல்லாமே கருமையாக ஒரே இருட்டிப்பு அவருக்கு. அவர் பணிபுரிந்த பால்ட்க்ரீக் சபையின் அங்கங்களான மேரியும் ரேயும் ஈடித்தை அட்லாண்டா அழைத்துச் சென்றனர்.

கவனத்துடன் நோயாளிகளைக் கண்காணிக்கும் கண் மருத்துவமனை அது. ஈடித்தின் கண்களைப் பரிசோசித்த மருத்துவர், அறுவை சிகிச்சையின் அத்தியாவசியத்தை விளக்கினார். அறுவை சிகிச்சைக்கான நாளும் குறிக்கப்பட்டது. தங்கள் இருப்பிடம் திரும்பிய ஈடித், ரேய், மேரி மூவரும் பிற ஆலய நண்பர்களோடு இணைந்து ஜெபித்தனர். அப்போது தான் அமெரிக்காவில் குடியேறியிருந்ததால் அறுவை சிகிச்சைக்குப் போதிய பணமில்லாத சூழ்நிலை ஈடித்திற்கு. அழைக்கிறவர் உண்மையுள்ளவராகவே இருந்தார். மருத்துவர் குறித்த நாளில் டிச்பீல்ஃட் தம்பதியினர் ஈடித்தை அழைத்துச் சென்றனர்.

“எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்” (நீதி.11:25). தாயையும் தகப்பனையும் விட்டு இந்தியா வந்து இந்திய மண்ணில் பல இடங்களில் சிலுவைக்கொடி நாட்டிவிட்டு சொந்தபூமி திரும்பிய ஈடித்திற்கு சொந்தங்களும் உறவுகளுக்கும் மேலாக அன்பு செலுத்தவும் பராமரிக்கவும் கிடைத்து. பந்தங்கள் பால்ட்க்ரீக் சபை மக்களே,

அறுவை சிகிச்சை ஆண்டவர் கிருபையால் வெற்றியாய் முடிந்தது. இரண்டு கண்களுமே கட்டப்பட்ட நிலையில் அசையமுடியாத நேரமது. ஈடித்தின் கூந்தலே மூன்றடி நீளமாயிருந்தது. அவரால் அதை பராமரிக்க முடியாததால் முடிய வேண்டிய சூழ்நிலை. மனப்பக்குவத்தோடு அந்தக் கஷ்டமான முடிவிற்கு சம்மதித்தார். கிறிஸ்துவுக்காக உறவுகளை வெட்டி எறிந்ததால் ஏறட்ட ரணத்தைத் தனக்குள்ளேயே ஆற்றிப் பழகியிருந்த ஈடித்திற்கு இரட்டைப் பின்னல் வெட்டப்பட்டதால் ஏற்பட்ட ரணத்தையும் சமாளிக்க முடிந்தது. முடிவெட்டப்பட்டதால் வித்தியாசமாகத் தோற்றமளித்தாலும் அந்தப் புதிய தோற்றத்தால் அமெரிக்கப் பெண்ணாக மாறியிருந்தார். வெளிப்பார்வையில் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் நெஞ்சில் பொறிக்கப்பட்ட வேத வார்த்தைகள் மனதில் புதைந்து கிடந்த பாடல்கள் மூலம் பக்கத்திலிருந்த பிணியாளி நண்பர்களை வானவரிடம் வழிநட த்தினார் ஈடித் பெர்ல் மார்கன்.

**VBS -ன் 25-வது வருட நிறைவு விழா**

அது 1977-ம் ஆண்டு. தென் தமிழகத்தில் பாளையங்கோட்டையில் VBS -ன் 25-வது வருட நிறைவு விழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பித்தன. வெள்ளி விழாவின் குதூகலத்தோடு சேர்ந்து வந்த நற்செய்தி ஈடித் அம்மையாரின் இந்தியா வருகை. ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் இந்தியா வரவிருந்த ஈடித்தும் ஆசையாய் ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டார். இந்திய விஜயம் அவருக்குத் தாயகம் திரும்புவதாய் உற்சாகம் தந்தது. பெரேயா மக்களுக்கு ஒரு பக்கம் யூபிலி கொண்டாட்டம். மறுபக்கம் ஈடித் அம்மாவின் வருகையான இரட்டிப்பான ஆசீர்வாதம்.

அந்த ஆண்டு VBS இயக்குநர் பயிற்சி முகாமிலும் ஈடித் அம்மையார் கலந்து கொண்டு வேத ஆராய்ச்சி நடத்தினார். இந்திய வாழ்வின் பசுமையான நினைவுகள் ஈடித்தின் மனதில் பசுமை குன்றாமலிருந்தது. அவரது வருகையைக் குறித்து அறிந்தவர் அண்மையிலும் தூரத்திலுமிருந்து வந்து அம்மையாரைச் சந்தித்து மகிழ்ந்தனர்.

யூபிலிக் கொண்டாட்டங்கள் வெகு நேர்த்தியான ஐக்கியக் கூடுகையாகவும், சாட்சியின் நேரமாகவும் அனுசரிக்கப் பட்டன. அந்த ஆண்டில்தான் ஆரம்ப VBS ஊழியத்தில் தோள்கொடுத்த பெரியதம்பி JEP சித்தர் அவர்களின் கடைசி மகன் பிரான்சிஸ்-மாலின் திருமணம் ஒழுங்கானது. தனது ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு அவசியமான ஆரம்பகட்ட வேலைகளுக்கான ஆலோசனை வழங்கி மகிழ்ந்தார் ஈடித்.

- **தொடரும்**

## பாடல் பிறந்த கதை

***பிளவுண்ட மலையே [பாமாலை 350]***

(Rock of ages cleft for me)

1. பிளவுண்ட மலையே
புகலிடம் ஈயுமே
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்.



2. எந்தக் கிரியை செய்துமே
உந்தன் நீதி கிட்டாதே
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே

***'நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்'. யாத் 33:22***

நிழல்போன்ற வாழ்விலும், கண்ணை மூடும் சாவிலும், புகலிடமாக விளங்கும் கற்பாறையே நமக்காகப் பிளவுண்ட கிறிஸ்து. இந்தப் பாடலை எழுதியவர், அகஸ்டஸ் டாப்லேடி என்னும் போதகர். அவர் குருத்துவ ஊழியம் செய்த பிளாக்டன் கிராமத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இயற்கை அழகு நிறைந்த ஒரு புல்வெளி இருந்தது. அதில் புதர்களும், பாறைகளும் உண்டு. போதகர் அடிக்கடி அங்கு கால்நடையாக உலாவச் செல்வது வழக்கம். ஒருநாள் அங்கு சென்றிருக்கையில், திடீரென்று புயலோடு கூடிய மழை உண்டாயிற்று. ஒதுங்குவதற்கு வழியில்லாமல் அங்குமிங்கும் பார்க்கையில் அவர் ஒரு பெரிய பாறையில் செங்குத்தான ஒரு பிளவைக் கண்டு, அதில் புயல் ஓயும்வரை ஒதுங்கி நின்று பத்திரமாகக்

காப்பாற்றப்பட்டார். எப்போதும் ஆவிக்குரிய விஷயங்களையே சிந்தித்துக் கொண்டிருந்த நம் போதகருக்கு நேரிட்ட இந்நிகழ்ச்சி, பூலோகத்தில் நமக்கு நேரிடும் துன்பங்களுக்கு நாம் தப்பி ஒதுங்க நமது ஆண்டவர் புகலிடமாக விளங்குகிறார்' என்னும்உணர்ச்சியை பிளவைக்கண்டு, அதில் புயல் ஓயும்வரை ஒதுங்கி நின்று பத்திரமாகக் பிளவைக்கண்டு, அதில் புயல் ஓயும்வரை ஒதுங்கி நின்று பத்திரமாகக் மூப்பியது. அப்போது, 'பிளவுண்ட மலையே' என்னும் பாடல் அவர் மனதில் உருவாயிற்று. புயல் ஓய்ந்தவுடன் கீழே கிடந்த ஒரு சீட்டில் *(Playing Card)* இப்பாடலின் முதல் கவியை எழுதினார். இந்த சீட்டு இன்னமும் அமெரிக்காவில் பத்திரமாக வைக்கப் பட்டிருக்கிறது. வீட்டுக்குச் சென்றவுடன் இப்பாடலின் மீதிக் கவிகளையும் எழுதி முடித்தார்.

விக்டோரியா மகாராணியாரின் கணவரான ஆல்பர்ட் கோமகன் இப்பாடலை பெரிதும் பாராட்டி, உள்ளத்தைக் கவரும் பாடல் எனக் கூறியுள்ளார். தமது மரணப் படுக்கையிலும் இதை அடிக்கடி பாடி, 'இக்கடைசி நேரத்தில் எனது லௌகீக மகிமைகளையே நான் சார்ந்திருந்தேனாகில் மிகவும் எளியவனாவேன்' என்றும், இப்பாடல் தனக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது என்றும் கூறினார்.

இதை எழுதிய அகஸ்டஸ் டாப்லேடி என்பவர், 1740ம் ஆண்டு, நவம்பர் மாதம் 4ம் தேதி, இங்கிலாந்தில் பர்ன்ஹம் என்னுமிடத்தில் பிறந்தார். அவரது தந்தை ஆங்கிலப்படையில் உயர் பதவியில் இருந்து, சண்டையில் மாண்டார். தாயாரின் பராமரிப்பில் மகன் முதலில் லண்டன் மாநகரிலும், பின்னர் டப்ளின் நகரிலும் கல்வி பயின்று, 'எம்.ஏ.' பட்டம் பெற்றார். 1762ல் அவர் ஆங்கிலத் திருச்சபையில் குருவாக அபிஷேகம் பெற்று, புரோடன்பெரி என்ற நகரில் ஊழியம் செய்தார். ஆரம்பத்தில் அவர் மெதடிஸ்டு சபையை ஸ்தாபித்த ஜான் வெஸ்லியுடன் நட்புகொண்டிருந்து, பின்பு இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடு உண்டானதால், பிரசங்க பீடத்திலிருந்து வெஸ்லியின் போக்கைக் கண்டித்தார். பிரசங்கம் செய்வதில் அதிக ஊக்கமும் திறமையுமுள்ளவர். எனினும் உடல் பலவீனமாயிருந்ததால் அதிக வேலை காரணமாக, 1778ம் ஆண்டு, தனது 38வது வயதிலேயே காலமானார்.

'பிளவுண்ட மலையே' என்னும் பாடல் 1776'ல் எழுதப்பட்டது. அநேக பிறமொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுப் பல இனிய ராகங்களில் உலகமெங்கும் பாடப்பட்டு வருகிறது. இதைத் தவிர அவர் வேறு பாடல்களும் எழுதியுள்ளார்.

# ஆலயப் பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – ஜூன் 2024

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் – ஆயர் இல்லம் |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 4 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 7 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 9 | ஞாயிறு | 5.30 pm – 6.30pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 11 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 14 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 16 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 18 | செவ்வாய் | 7.00 pm – 8.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 21 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 25 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 27 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 30 | ஞாயிறு | 11.45 pm – 12.00 அm | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

## BIBLE READING FOR CHILDREN - JUNE 2024

| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.6.24 | Romans | 14 : 1 9 - 23 |
| 2.6.24 | Romans | 15 : 1 - 6 |
| 3.6.24 | Romans | 15 : 7 - 11 |
| 4.6.24 | Romans | 15 : 12 - 16 |
| 5.6.24 | Romans | 15 : 19 - 22 |
| 6.6.24 | Romans | 15 : 23 - 26 |
| 7.6.24 | Romans | 15 : 27 - 33 |
| 8.6.24 | Romans | 16 : 1 - 5 |
| 9.6.24 | Romans | 16 : 6 - 10 |
| 10.6.24 | Romans | 16 : 11 - 15 |
| 11.6.24 | Romans | 16 : 16 - 20 |
| 12.6.24 | Romans | 16 : 21 - 27 |
| 13.6.24 | I corinthians | 1 : 1 - 6 |
| 14.6.24 | I corinthians | 1 : 7 - 10 |
| 15.6.24 | I corinthians | 1 : 11 - 15 |
| 16.6.24 | I corinthians | 1 : 16 - 21 |
| 17.6.24 | I corinthians | 1 : 22 - 31 |
| 18.6.24 | I corinthians | 2 : 1 - 5 |
| 19.6.24 | I corinthians | 2 : 6 - 10 |
| 20.6.24 | I corinthians | 2 : 11 - 16 |
| 21.6.24 | I corinthians | 3 : 1 - 5 |
| 22.6.24 | I corinthians | 3 : 6 - 10 |
| 23.6.24 | I corinthians | 3 : 11 - 17 |
| 24.6.24 | I corinthians | 3 : 18 - 23 |
| 25.6.24 | I corinthians | 4 : 1 - 5 |
| 26.6.24 | I corinthians | 4 : 6 - 10 |
| 27.6.24 | I corinthians | 4 : 11 - 16 |
| 28.6.24 | I corinthians | 4 : 17 - 21 |
| 29.6.24 | I corinthians | 5 : 1 - 7 |
| 30.6.24 | I corinthians | 5 : 8 - 12 |

## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் – ஜூன் 2024




| தேதி | நாள் | காலை | | மாலை | |
|---|---|---|---|---|---|
| 1 | சனி | 2 சாமுவேல் | 19 : 1 - 15 | மத்தேயு | 1 : 1 - 16 |
| 2 | ஞாயிறு | 2 சாமுவேல் | 19 : 16 - 30 | மத்தேயு | 1 : 17 - 25 |
| 3 | திங்கள் | 2 சாமுவேல் | 19 : 31 - 43 | மத்தேயு | 2 : 1 - 11 |
| 4 | செவ்வாய் | 2 சாமுவேல் | 20 : 1 - 14 | மத்தேயு | 2 : 12 - 23 |
| 5 | புதன் | 2 சாமுவேல் | 20 : 15 - 26 | மத்தேயு | 3 : 1 - 17 |
| 6 | வியாழன் | 2 சாமுவேல் | 21 : 1 - 14 | மத்தேயு | 4 : 1 - 10 |
| 7 | வெள்ளி | 2 சாமுவேல் | 21 : 15 - 22 | மத்தேயு | 4 : 11 - 25 |
| 8 | சனி | 2 சாமுவேல் | 22 : 1 - 17 | மத்தேயு | 5 : 1 - 16 |
| 9 | ஞாயிறு | 2 சாமுவேல் | 22 : 18 - 34 | மத்தேயு | 5 : 17 - 31 |
| 10 | திங்கள் | 2 சாமுவேல் | 22 : 35 - 51 | மத்தேயு | 5 : 32 - 48 |
| 11 | செவ்வாய் | 2 சாமுவேல் | 23 : 1 - 15 | மத்தேயு | 6 : 1 - 18 |
| 12 | புதன் | 2 சாமுவேல் | 23 : 16 - 39 | மத்தேயு | 6 : 19 - 34 |
| 13 | வியாழன் | 2 சாமுவேல் | 24 : 1 - 14 | மத்தேயு | 7 : 1 - 12 |
| 14 | வெள்ளி | 2 சாமுவேல் | 24 : 15 - 25 | மத்தேயு | 7 : 13 - 29 |
| 15 | சனி | 1 இராஜாக்கள் | 1 : 1 - 14 | மத்தேயு | 8 : 1 - 17 |
| 16 | ஞாயிறு | 1 இராஜாக்கள் | 1 : 15 - 27 | மத்தேயு | 8 : 18 - 34 |
| 17 | திங்கள் | 1 இராஜாக்கள் | 1 : 28 - 42 | மத்தேயு | 9 : 1 - 17 |
| 18 | செவ்வாய் | 1 இராஜாக்கள் | 1 : 43 - 53 | மத்தேயு | 9 : 18 - 38 |
| 19 | புதன் | 1 இராஜாக்கள் | 2 : 1 - 14 | மத்தேயு | 10 : 1 - 15 |
| 20 | வியாழன் | 1 இராஜாக்கள் | 2 : 15 - 26 | மத்தேயு | 10 : 16 - 31 |
| 21 | வெள்ளி | 1 இராஜாக்கள் | 2 : 27 - 33 | மத்தேயு | 10 : 32 - 42 |
| 22 | சனி | 1 இராஜாக்கள் | 2 : 34 - 46 | மத்தேயு | 11 : 1 - 18 |
| 23 | ஞாயிறு | 1 இராஜாக்கள் | 3 : 1 - 14 | மத்தேயு | 11 : 19 - 30 |
| 24 | திங்கள் | 1 இராஜாக்கள் | 3 : 15 - 28 | மத்தேயு | 12 : 1 - 16 |
| 25 | செவ்வாய் | 1 இராஜாக்கள் | 4 : 1 - 15 | மத்தேயு | 12 : 1 7- 37 |
| 26 | புதன் | 1 இராஜாக்கள் | 4 : 16 - 34 | மத்தேயு | 12 : 38 - 50 |
| 27 | வியாழன் | 1 இராஜாக்கள் | 5 : 1 - 18 | மத்தேயு | 13 : 1 - 17 |
| 28 | வெள்ளி | 1 இராஜாக்கள் | 6 : 1 - 18 | மத்தேயு | 13 : 18 - 30 |
| 29 | சனி | 1 இராஜாக்கள் | 6 : 19 - 38 | மத்தேயு | 13 : 31 - 43 |
| 30 | **ஞாயிறு** | **1 இராஜாக்கள்** | 7 : 1 - 15 | மத்தேயு | 13 : 44 - 58 |

# ஆராதனை பாடல்கள் – ஜூன் 2024



| | |
|---|---|
| **07-06-24** | |
| பாமாலை - 1 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை – 264 | நல் மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை - 6 | சீர்மிகு வான்புவி தேவா |
| மங்கள கவிகள் - 2 | கர்த்தர் தந்த ஈவுக்காக |
| **14-06-24** | |
| பாமாலை - 19 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை - 31 | கீழ் வானகோடியின் |
| கீர்த்தனை – 83 | இயேசுவின் நாமமே திருநாமம் |
| பாமாலை – 212 – 1&2 | பகலோன் கதிர் போலுமே |
| **21-06-24** | |
| பாமாலை - 249 | நல் மீட்பர் பட்சம் நில்லும் |
| பாமாலை - 326 | ரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை – 193 | எல்லாம் இயேசுவே |
| பாமாலை – 322 – 7 | மன்றாடிப்பாடி கிறிஸ்தோனாக |
| **28-06-24** | |
| பாமாலை – 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை - 324 | பாதை காட்டும் மா யெகோவா |
| கீர்த்தனை – 70 | ஆத்துமமே என் முழு உள்ளமே |
| பாமாலை - 36 | என்னோடிரும் மா நேச கர்த்தரே |

## திருமறை பாட ஒழுங்குகள் – ஜூன் 2024

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| ***07-06-24*** | ஞானம் கடவுளின் பரிசு | ஆதி. *41:38-44* | நீதி. *24:1-14* | மத்தேயு *6:24-34* | - |
| ***14-06-24*** | கடவுளின் மகிமையை வெளிப்படுத்தும் இயற்கை | ஆதி. *1:27-31* | ரோமர் *8:19-25* | லூக்கா *8:19-25* | *19* |
| ***21-06-24*** | ஆவியோடும் உண்மையோடும் தொழுவோம் | ஏசாயா *6:1-8* | எபி. *12:22-29* | லூக்கா *4:14-21* | - |
| ***28-06-24*** | சீடத்துவம் | தானி. *6:11-23* | 2 கொரி. *6:1-10* | மாற்கு *8:27-38* | *34* |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| ***04-06-24*** | சங்கீதம் | *124* | TCA |
| ***11-06-24*** | சங்கீதம் | *125* | Al Wadha |
| ***18-06-24*** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| ***25-06-24*** | சங்கீதம் | *126* | Hamdan |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## BIRTHDAY - JUNE




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Salin Robert. S |
| 1 | Ms. | Evelyn Gracia. R |
| 2 | Mrs. | Vanitha Mani Inbakumari |
| 3 | Ms | Dafflin D M |
| 4 | Mrs. | Sathya Arul Mozhi Varman |
| 5 | Mr. | Andrew Jones Arun |
| 5 | Mr. | Johnson Sagayaraj |
| 6 | Mr. | Rajesh T |
| 6 | Mrs. | K. Nithya Prince |
| 6 | Mrs. | Sweetlin Selwyn |
| 7 | Mr. | Ashok Raj Kumar |
| 7 | Mr. | Samuel Solomon |
| 7 | Mr | T. Franklin |
| 8 | Mr. | Shane Daniel |
| 8 | Master | Juda |
| 9 | Baby | Miracline Nishanth |
| 9 | Mrs. | Brini Chandran. S. B |
| 10 | Mr. | Samuel Kirubasingh Appadurai |
| 11 | Mr. | Julian John |
| 11 | Mr. | Samuel Prakashraj. R |
| 12 | Mrs. | Pansy Sophia |
| 13 | Mrs. | Shalini |
| 13 | Mr. | Manuel Yesudian |
| 13 | Mr. | Jacob Jerald Ponselvan |
| 14 | Ms. | Manuel Yesudial |
| 15 | Mr | Allwin Emmanuel Packianathan |
| 15 | Mr | Jayaraj Robinson |
| 15 | Mr | Thiyagu Murugaraj |
| 15 | Mr. | Johnson Prabu |

# BIRTHDAY - JUNE

HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 16 | Mrs. Dr. | Briliya Rajabel Devadas |
| 16 | Mrs. | Helen Paul |
| 16 | Miss. | Keziah Grace |
| 16 | Mrs. | Jainie Janet Jenitta Abraham |
| 17 | Ms. | Krithika |
| 18 | Mr. | Abryan Gabriel Jeyaseelan |
| 18 | Mr. | Vasanth Dhanapaul |
| 20 | Mrs. | Suganthi Selvin |
| 20 | Master. | Daniel Vanya |
| 20 | Baby | Athira Thiyagu |
| 20 | Mr. | Japa Kumar. C. S |
| 21 | Mr. | Titus Kennerth |
| 21 | Mr. | Prince Immanuel Samuel |
| 21 | Mrs. | Jemiia Rose S |
| 23 | Mrs. | Alice Jennifer |
| 23 | Mr. | Vigin Cv |
| 23 | Mr. | Yesudhas M |
| 23 | Mr. | Jegan Mahesh |
| 24 | Mr. | Johnson Ramesh Kumar |
| 24 | Mr. | Michael G |
| 24 | Mr. | Joel Mart |
| 24 | Mrs. | Christabel Jemila |
| 25 | Mr. | Prathap Singh |
| 26 | Ms. | Anoushka |
| 26 | Mr. | Solomon Susinder |
| 26 | Mr. | Godwin Mohan |
| 26 | Ms. | Selvamalar Raviraj |
| 27 | Mrs. | Blessy Kripalani |
| 28 | Mr. | Rejin Raj Manuel. R |
| 29 | Ms. | Jerilyn Pushpam |
| 29 | Mr. | Rajkumar |
| 29 | Mr. | Jeen Lemon |
| 29 | Master. | Adhip Immanuel |
| 29 | Master. | Aarav Samuel |
| 29 | Mrs | Dheenal |
| 30 | Mr. | Jeyakumar |

## WEDDING ANNIVERSARY - JUNE




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 5 | Mr. & Mrs. | Ruban Ponnuswamy |
| 5 | Mr. & Mrs. | Daniel Jebadurai |
| 11 | Mr. & Mrs. | Jeya Mahear |
| 21 | Mr. & Mrs. | Max Jeevin |
| 26 | Mr. & Mrs. | Arul Mozhi Varman |
| 27 | Mr. & Mrs. | John Andrews |
| 28 | Mr. & Mrs. | Jeen Lemon |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Nithin Sekher | 474 |
| 2 | Mr. Vethakkan Pandian | 475 |
| 3 | Mr. Arun.A | 476 |
| 4 | Mr. David Raja Manimaran | 477 |

## NEW ARRIVAL




*இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் சங். 127.4a*

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Arlene Ruth | Mr. Joe Vivek David & Mrs. Sharon Sushantha |
| 2 | James Bezalel | Mr. Jacob Jerald & Mrs. Adlin Cherisha |






**Farewell to**
**Rev. Lalji M Philip & Family**
**CSI Malayalam Church**
**Abu Dhabi**


WHOEVER
WANTS to be
MY
DISCIPLE
MUST DENY
themselves
& TAKE UP
THEIR CROSS DAILY &
Follow ME.
For WHOEVER
WANTS
TO SAVE HIS LIFE
WILL LOSE IT.
BUT
WHOEVER
LOSES
THEIR LIFE
FOR
ME
Will
SAVE
IT.
Luke 9:23-24